<u>முதன்மை மாவட்ட நீதிமன்றம், கரூர்.</u>

<u>அ.வ.எண்.**363/2022**</u>

2025-ம் வருடம் ஆகஸ்ட் திங்கள் 07-ம் நாளன்று வாதி / பிரதிவாதி சாட்சியாக வா.சா.1-வது நபரின் வாக்குமூலம் (1969 ம் ஆண்டின் 54 விதியின்படி 95-வது பிரிவின்படி ஏற்பட்டுள்ளபடி திரு.ராமகிருஷ்ணன், உதவியாளர் அவர்களால் ஆணையிட்டு உறுதிமொழி செய்யப்பட்டுள்ளது.

| | | | |
|---|---|---|---|
| பெயர். | : ரமேஷ் | தொழில் | : |
| த/பெ. | : | வட்டம் | : |
| முகவரி | : | மதம் | : |
| ஜாதி | : | வயது | : |

<u>முதல் விசாரணை:-</u>

நான் இவ்வழக்கில் வாதி. என்னுடைய முதல் விசாரணை சாட்சியத்தை பிரமாண வாக்குமூலமாக தாக்கல் செய்கிறேன். அது என்னுடைய தகவலின் பேரில் தயாரிக்கப்பட்டு, அதை நான் படித்து பார்த்து கையெழுத்திட்டேன். கடந்த 30.10.2019 ஆம் தேதியிட்டு வாதியிடமிருந்து இறந்துபோன ரங்கசாமி ரூ.15,00,000/-ம் கடனாக பெற்றுக்கொண்டு அதற்காக வாதியின் பெயரில் எழுதிக்கொடுத்த அசல் புரோநோட் வா.சா.ஆ.1.ஆக குறியீடு செய்யப்படுகிறது. கடந்த 17.10.2022 ஆம் தேதியிட்டு வாதி வழக்கறிஞர் மூலம் பிரதிவாதிகளுக்கு, வழக்கு புரோநோட்டின் அடிப்படையில் ரங்கசாமி பெற்ற கடனை திரும்ப செலுத்தகேட்டு அனுப்பிய வழக்கறிஞர் அறிவிப்பு அலுவலக நகல் வா.சா.ஆ.2. ஆக குறியீடு செய்யப்படுகிறது. கடந்த 20.10.2022 ஆம்

தேதியிட்ட வாதியின் வழக்கறிஞர் அறிவிப்பை 1 ஆம் பிரதிவாதி பெற்றுக்கொண்டதற்கான அசல் அஞ்சல் ஒப்புதல் அட்டை வா.சா.ஆ.3. ஆக குறியீடு செய்யப்படுகிறது. கடந்த 20.10.2022 ஆம் தேதியிட்ட வாதியின் வழக்கறிஞர் அறிவிப்பை 2 ஆம் பிரதிவாதி பெற்றுக்கொண்டதற்கான அசல் அஞ்சல் ஒப்புதல் அட்டை வா.சா.ஆ.4. ஆக குறியீடு செய்யப்படுகிறது. கடந்த 20.10.2022 ஆம் தேதியிட்ட வாதியின் வழக்கறிஞர் அறிவிப்பை 3 ஆம் பிரதிவாதி பெற்றுக்கொண்டதற்கான அசல் அஞ்சல் ஒப்புதல் அட்டை வா.சா.ஆ.5. ஆக குறியீடு செய்யப்படுகிறது. கடந்த 03.11.1954 ஆம் தேதியிட்ட வேலாயுதம்கவுண்டர் பெயரில் உள்ள கிரைய பத்திரத்தின் சார்பதிவாளர் இணையவழி பதிவிறக்க நகல் வா.சா.ஆ.6. ஆக குறியீடு செய்யப்படுகிறது. கடந்த 06.08.2012 ஆம் தேதியிட்டு வாதிக்கு அவரின் தாயார் மற்றும் சகோதரி எழுதிக்கொடுத்த பாகப்பாத்திய விடுதலை பத்திரத்தின் சார்பதிவாளர் இணையவழி பதிவிறக்க நகல் வா.சா.ஆ.7.ஆக குறியீடு செய்யப்படுகிறது. கடந்த 25.01.2018 ஆம் தேதியிட்டு வாதிக்கு அவரின் தாயார் மற்றும் சகோதரி எழுதிக்கொடுத்த பாகப்பாத்திய விடுதலை பத்திரத்தில் எற்பட்ட சர்வே எண் குறைபாட்டை சீர் செய்ய எழுதிக்கொண்ட பிழைதிருத்தல் பத்திரத்தின் சார்பதிவாளர் இணையவழி பதிவிறக்க நகல் வா.சா.ஆ.8.ஆக குறியீடு செய்யப்படுகிறது. கடந்த

28.06.2023 ஆம் தேதியிட்ட வேலாயுதம்கவுண்டரின் இதர வாரிசுகளும், வாதி, வாதியின் தாயார் மற்றும் சகோதரி ஆகியோர்கள் எழுதிக்கொண்ட பாகப்பிரிவினை பத்திரத்தின் சார்பதிவாளர் இணையவழி பதிவிறக்க நகல் வா.சா.ஆ.9.ஆக குறியீடு செய்யப்படுகிறது. கரூர் வட்டம், மேலப்பாளையம் கிராமம், சர்வே எண்.866/3, 867/4, 867/5, 917/ஏ, 916/பி, 916/சி1, 917/பி1 , 917/பி2 சி, 918/பி மற்றும் புலியூர் கிராமம், சர்வே எண்.1913/2 இ, பூமிகளுக்குரியதும் வாதியின் பெயரை உள்ளடக்கிய பட்டாவின் கணிணி பதிவிறக்க நகல் (எண்ணிக்கை 10) வா.சா.ஆ.10.ஆக குறியீடு செய்யப்படுகிறது. வழக்குப்படி தீர்ப்பாக வேண்டுகிறேன்.

**<u>1 மற்றும் 2 பிரதிவாதிகள் தரப்பில் குறுக்கு விசாரணை</u>**

நான் விவசாயத்தை தவிர வேறு எந்த தொழிலும் செய்யவில்லை என்று சொன்னால் சரிதான். நான் தாக்கல் செய்துள்ள பிரமாண வாக்குமூலத்தில் எனக்குண்டான சொத்து விபரத்தை குறிப்பிட்டுள்ளேனா என்றால் குறிப்பிட்டுள்ளேன். உங்களுக்கு எத்தனை ஏக்கர் பாத்தியம், எத்தனை ஏக்கரில் விவசாயம் செய்து வருகிறீர்கள் என்றால் எனக்கு 5 ஏக்கர் பாத்தியம், 5 ஏக்கரில் விவசாயம் செய்து வருகிறேன். மேற்படி 5 ஏக்கருக்குண்டான ஆவணங்களை நீதிமன்றத்தில் தாக்கல் செய்துள்ளேன். 5 ஏக்கர் நிலம் நஞ்சை நிலமா, புஞ்சை நிலமா என்றால் எனக்கு நீரின்

வசதிக்கு தகுந்தாற்போல் புஞ்சை சாகுபடியும், நஞ்சை சாகுபடியும் செய்வேன். 5 ஏக்கர் விவசாயத்தில் உங்களுக்கு எவ்வளவு வருமானம் வரும் என்றால் 7-10 இலட்சம் முதலீடு போக வருமானம் வரும். நீங்கள் பொய்யாக வருமானம் வருகிறது என்று கூறிகிறீர்கள் என்றும், விவசாய தொழில் செய்தால் நஷ்டம்தான் வரும் என்று சொன்னால் சரியல்ல. உங்கள் பூமி அமராவதி ஆற்று பாசனமோ, காவிரி பாசனமோ அல்ல என்று சொன்னால் சரியல்ல, அமராவதி பாசனமாகும், கேணியும், போரும் உள்ளது. நீங்கள் சாகுபடி அடங்கல் கணக்கை கிராம நிர்வாக அலுவலரிடம் பெற்று தாக்கல் செய்யவில்லை என்று சொன்னால் சரிதான். நீங்கள் 15,00,000/- கடன் கொடுத்ததாக சொல்லியுள்ளீர்கள் என்றும், ரூ.15,00,000/- என்பது பெரியதொகை என்றால் என்னை பொறுத்த வரை அது பெரிய தொகை அல்ல. 1 ஆம் பிரதிவாதியின் கணவரும், 2 ஆம் பிரதிவாதியின் தந்தையுமான இறந்துபோன ரெங்கசாமியை உங்களுக்கு எத்தனை வருடங்களாக தெரியும் என்றால் 2015 ஆம் ஆண்டில் இருந்து தெரியும். ரெங்கசாமி உங்களுக்கு உறவுக்காரா, ஒரே ஊர்க்காரா என்றால் இல்லை, ரெங்கசாமியின் சித்தி பையன் குணசேகரன் எனக்கு பழக்கமானவர், அவர் மூலமாக ரெங்கசாமி எனக்கு பழக்கமானார். 1, 2 பிரதிவாதிகளுடன்தான் ரெங்கசாமி உயிருடன் இருந்த காலத்தில் வசித்து வந்தார் என்று சொன்னால் எனக்கு தெரிந்த வகையில் 1, 2

பிரதிவாதிகளும், ரெங்கசாமியும் ஒன்றாகதான் கரூரில் குடியிருந்தார்கள். ரெங்கசாமி கரூரில் குடியிருந்தார், தொழில் செய்த இடம் நொய்யலில் இருந்து வேலாயுதம்பாளையம் செல்லும் இடத்தில் தொழில் செய்தார். 1, 2 பிரதிவாதிகள் எந்த காலத்திலும் கரூரில் குடியிருக்கவில்லை என்றும், அவர்கள் நொய்யலில் குடியிருந்தார்கள் என்றும் அங்குதான் அனைத்து ஆவணங்களும் உள்ளது என்று சொன்னால் சரியல்ல, அவர் கரூரில்தான் குடியிருந்தார். இறந்துபோன ரெங்கசாமி உங்களிடம் கடன் வாங்கியதாக சொல்லும் காலகட்டத்தில் பாக்குமட்டை தொழில் செய்தார் என்று சொன்னால் சரிதான். அந்த தொழில் மூலம் மாதம் எவ்வளவு வருமானம் வரும் என்ற விபரம் உங்களுக்கு தெரியும் என்றால் ரெங்கசாமிக்கு சொந்த கட்டிடம் உள்ளது, அதனை வைத்துதான் நான் கடன் கொடுத்தேன், தொழில் நல்லபடியாக செய்தார். ரெங்கசாமி ரூ.15,00,000/- கடன் வாங்கியது இதுதான் முதல் தடவை அதற்கு முன்னர் கடன் வாங்கியதில்லை என்று சொன்னால் சரிதான். ரெங்கசாமி எப்போது கடன் கேட்டார் என்றால் கடன் 30.10.2019 ல் கொடுத்தேன், அதற்கு முன்னர் நான்கு நாட்களுக்கு முன்பு என் வீட்டிற்கு வந்து ரெங்கசாமி பணம் கேட்டார். ரூ.15,00,000/- பணம் கேட்டார். உங்களுக்கு எத்தனை வங்கியில் வரவு, செலவு உள்ளது என்றால் எனக்கு எந்த வங்கியிலும் வரவு, செலவு இல்லை. நீங்கள் வருமான வரி கட்டுகிறீர்களா என்றால்

இல்லை, பான்கார்டும் இல்லை. ரூ.15,00,000/- வியாபார செலவிற்காக கேட்டாரா என்றால் இல்லை, குடும்ப செலவிற்காக கேட்டார். நீங்கள் வழக்கு தாக்கல் செய்வதற்கு முன்பு கொடுத்த அறிவிப்பில் 3 ஆம் பிரதிவாதியின் வைத்திய செலவிற்காக கேட்டுள்ளதாக சொல்லியிருப்பது சரியா, தவறா என்றால் சரிதான், என்னிடம் அவரின் அம்மாவின் வைத்திய செலவிற்கும், குடும்ப செலவிற்கும் வேண்டும் என்று கேட்டார். 30.10.2019 ஆம் தேதியன்று கடன் வாங்கிய பின்னர் எத்தனை நாளில் மேற்படி ரெங்கசாமி இறந்துபோனார் என்றால் 5, 6 நாட்கள் கழித்து இறந்துபோனார். நீங்கள் தாக்கல் செய்துள்ள பிரமாண வாக்குமூலத்திற்கு நான் விபரம் சொல்ல எனது வழக்கறிஞர் தயார் செய்தார். உங்களிடம் கடன் பெற்று 5, 6 நாட்களுக்குள் இறந்துவிட்டார், நீங்கள் அதற்குள் வட்டி வேண்டும் என்று கேட்டீர்களா என்றால் என் பக்கத்து நிலத்துக்காரர் விலைக்கு கொடுப்பதாக இருந்தார், ஆகையால் நான் ரெங்கசாமியிடம் நான் அந்த பணத்தை கேட்டேன், நான் ரெங்கசாமிக்கு கொடுப்பதற்கு முன்பாக ரூ.15,00,000/- இடம் வாங்கதான் வைத்திருந்தேன். நீங்கள் கடன் கொடுத்தவுடன் அந்த பணத்தை திருப்பி கேட்டீர்களா என்றால் எவ்வளவு நாளில் திருப்பி தருவீர்கள் என்று நான் ரெங்கசாமியிடம் கேட்டேன். ரெங்கசாமியிடம் பலமுறை அசல் வட்டி இரண்டையும் திரும்ப செலுத்த நீங்கள் பலமுறை கேட்டதாக பிரமாண வாக்குமூலத்தில்

கூறியுள்ளீர்கள் என்றால் நான் பக்கத்து தோட்டத்து கிரையம்பேசி வாங்க இருப்பதாக கூறி பணம் கேட்டேன். கடன் கொடுத்த 5 நாளில் திருப்பி கேட்டீர்கள் என்றால் நீங்கள் எத்தனை நாளில் பணத்தை திருப்பி கொடுப்பீர்கள் என்றுதான் கேட்டேன். நான் பணம் கொடுக்கும்போதே பக்கத்து இடத்தை வாங்கவதற்குதான் பணம் வைத்துள்ளேன், ஆகையால் நீங்கள் அந்த நிலம் விலைக்கு வரும்போது பணம் கொடுக்கவேண்டும் என்று சொல்லிதான் பணத்தை கொடுத்தேன். நீங்கள் பொய்யாக சாட்சியம் அளிக்கிறீர்கள் என்றால் சரியல்ல. கடன் கொடுத்ததாக சொல்லப்படும் தேதியில் எத்தனை மணிக்கு, யார், யார் முன்னிலையில் பணம் கொடுத்தீர்கள் என்றால் காலை 9 மணி இருக்கும், அப்போது ரெங்கசாமி, திருமூர்த்தி, சரவணன் ஆகியோர்கள் இருந்தார்கள். திருமூர்த்தி என்பவர் உங்கள் ஊரை சார்ந்தவர் என்று சொன்னால் சரிதான். சரவணன் உங்களுக்கு உறவுமுறையா என்றால் உறவுக்காரர் அல்ல. 1 ஆம் பிரதிவாதியின் கணவரும், 2 ஆம் பிரதிவாதியின் தகப்பனாருமான ரெங்கசாமி உங்களிடம் கடன் பெறவேண்டிய அவசியம் இல்லை என்று சொன்னால் சரியல்ல. இறந்துபோன ரெங்கசாமிக்கு நிறைய வருமானம் ஈட்டி வந்தார் என்றும் அவரே நிறைய பேர்களுக்கு கடன் கொடுத்துள்ளார் என்று சொன்னால் சரியல்ல. இறந்துபோன ரெங்கசாமியின் தம்பி சிவக்குமார் தூண்டுதலின்பேரில்தான் நீங்கள், திருமூர்த்தி, சரவணன்

ஆகியோர்கள் சேர்ந்து போலியாக தாவா புரோநோட்டை தயார் செய்து 1, 2 பிரதிவாதிகளின் சொத்தை அபகரிக்கவேண்டி தாவா தாக்கல் செய்துள்ளீர்கள் என்றும், எந்த காலத்திலும் ரெங்கசாமி உங்களிடம் கடன் பெறவில்லை என்றும், ரூ.15,00,000/- பணம் கொடுப்பதற்கு உங்களுக்கு வசதி, வாய்ப்பு இல்லை என்றும், உங்களிடம் 5 ஏக்கர் நிலம் இல்லை என்றும், 2 ஏக்கர் உள்ள நிலம்தான் உள்ளது என்று சொன்னால் சரியல்ல. 2 ஏக்கர் நிலமும் புஞ்சை நிலம் என்று சொன்னால் சரியல்ல. கரூரில் ரூ.15,00,000/- கொடுத்தால் வெறும் பிராமசரிநோட் வாங்கமாட்டார்கள் என்றும், அதற்கு அடமான பத்திரமும் சேர்த்து வாங்குவார்கள் என்று சொன்னால் சரியல்ல. பொய்யாக தாவா செய்துள்ளதால் தாவா தள்ளுபடி செய்யப்படவேண்டும் என்று சொன்னால் சரியல்ல. எந்தவொரு பிரதிபிரயோஜனமும் ஏற்படவில்லை, ஆகையால் தாவா தள்ளுபடி செய்யவேண்டும் என்று சொன்னால் சரியல்ல.

**ஒம்/.K.H.இளவழகன்**
**முதன்மை மாவட்ட நீதிபதி,**
**கரூர்.**